

தாம்பரம் மாநகரம் 63வது வார்டு மாமன்ற உறுப்பினர்,மேற்கு பகுதி பொருளாளர் பி.ஜோதிகுமார் – கலைசெல்வி ஜோதி குமார் ஆகியோரின் மகன் ஜெ.வினோத் எஸ்.திவ்யலஷ்மி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை! ந.இராமசாமி–போர்வாள் கதிரவன் பங்கேற்பு!

# பெங்களூருவில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா-மாநாடு!

### கர்நாடக அமைச்சர் எச்.சி.மகாதேவப்பா தொடங்கி வைக்கிறார் – முன்னணியினர் சிறப்புரை!

பெங்களூரு, பிப்,27-

கர்நாடாக மாநிலத் திராவிடர் கழகம் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா- எழுச்சி மாநாடு-2026 நாளை (28.2.2026-சனிக்கிழமை) காலை 10 மணி முதல் இரவு 8.30 மணி வரை , பெங்களூரு, வசந்தநர், காவேரப்பா லேஅவுட், மில்லர்ஸ் ரோட்டில் அமைந்துள்ள தேவராஜ் அர்ஸ் பவனில் நடைபெறுகின்றது. இம் மாநாட்டிற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று விழா பேருரையாற்றுகிறார்.

எஸ்.குணவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். கர்நாடக மாநில சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் எச்.சி.மகாதேவப்பா நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார். கர்நாடக மாநில சட்டமேலவை உறுப்பினர் பி.கே. அரிபிரசாத் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

முன்னாள் நீதியரசர் எச். என். நாகமோகன் தாஸ், வழக்கறிஞர் ரவிவர்மகுமார், ரிஸ்வான் அர்ஷத் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவு விழாவிற்கு பேராசிரியர் எஸ்.ஜி.சித்தராமையா தலைமை வகிக்கிறார். கர்நாடக மாநில அமைச்சர் பிரியாங்க் கார்கே, எஸ்.காந்தராஜ், கே.எஸ்.பகவான், பஞ்சகெரே ஜெயபிரகாஷ், சேத்தன் அகிம்சா, கர்நாடக மாநில தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் ந.இராமசாமி, டி.நரசிம்மமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரைவழங்குகின்றனர்.

நிறைவாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் மாநாட்டுப் பேருரையாற்றுகிறார்.

சமூக நீதிக்கான இதழியாளர் சங்கத் தலைவர் முத்து மணி நன்னன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கர்நாடக மாநில தி.மு.க.பொறுப்புக்குழுத் தலைவர் மொ.பெரியசாமி, மு.ஜானகிராமன், கு.செயகிருட்டிணன், வீ.மு.வேலு, பு.ர.கஜபதி, இரா. முல்லைக்கோ மற்றும் போர்முரசு கதிரவன் உள்ளிட்ட முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பிற்பகல் 12 மணி முதல் 2 மணி வரை சுயமரியாதை இயக்கம் நிகழ்காலமும், எதிர்காலமும் என்ற தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்றும், பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை உலகமயமாகும் பெரியார் கொள்கைகள் என்ற தலைப்பில் ஆய்வரங்கம் இரண்டும் நடைபெறுகின்றன. இவ் விரண்டு ஆய்வரங்கங்களிலும் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு தங்களின் கருத்துரைகளை வழங்குகின்றனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.வி.வேலு தலைமை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி!

### நடிகர்கள் நிழல்கள் ரவி – அசோக் செல்வன் – இந்திய வீராங்கனை பி.மாரியம்மாள் பரிசுகள் வழங்குகின்றனர்!

சென்னை, பிப். 27 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனித நேய விழா-2026 மனிதநேயம் - 22 காலத்தை வெல்லும் காலாட்படை! கழகத் தலைவரின் சொல்லே விடை! மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி 28.02.2026 சனிக்கிழமையன்று காலை 9.00 மணியளவில் அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு எழும்பூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் - முன்னாள் தமிழ்நாடு கால்பந்தாட்ட வீரர் டி.வி.வேலு தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் - தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் - சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி., வி.சுதாகர், சொ.வேலு, கோ. ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், பா. ஸ்ரீராமுலு, பரிதி இளம்சுருதி, வே.உமாகாந்த், எஸ்.மணிமுடி , ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில்விஜய், அ.நிர்மலாதேவி, கோ.மணி, ஃபாத்திமா முசாஃபர், ம. அசோக்குமார், எஸ். ரசூல், எம்.மலர்மாறன், கே. அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு (எ) சந்திரசேகர், வி. விஜயகுமார், எஸ்.டால்பின் ஹறி, இ.மொய்தீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் திரைக்கலைஞர்கள் நிழல்கள் ரவி, அசோக் செல்வன், சீனியர் இந்திய கால்பந்தாட்ட வீராங்கனை பி. மாரியம்மாள் ஆகியோர் பங்கேற்று பரிசுகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இதில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழா 500 நபர்களுக்கு அறுசுவை உணவு!

### ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. - எஸ்.மோகன் - ராஜா அன்பழகன்- ந.மோ.முரளி முன்னிலை!

சென்னை, பிப். 27-

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா முன்னிட்டு கோடம்பாக்கம் மு.சத்யா ஏற்பாட்டில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவை மாவட்ட செயலாளர் மயிலை தா வேலு எம்.எல்.ஏ வழங்குகிறார் இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ கே.ஏழுமலை எஸ். மோகன் ராஜா அன்பழகன் ந.மோ முரளி பங்கேற ஆகியோர் பங்கேற்கின்றனர் .

சென்னை தென்மேற்கு

### கோடம்பாக்கம் மு.சத்யா ஏற்பாட்டில் – கழகத்தினர் பங்கேற்பு !

மாவட்ட கழக துணை செயலாளர் கோடம்பாக்கம் மு.சத்யா ஏற்பாட்டில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் காமராஜர் காலனி மூன்றாவது தெரு 28.02.2026 மதியம் 12:00 மணிஅளவில்நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. கே.ஏழுமலை எஸ் மோகன் கோ.சு.மணி அ சந்திரசேகர் நந்தனம் வேதா கே.மலர் ராஜா அன்பழகன் ந.மோ முரளி கார்த்திகா பாஸ்கர்எம்.சி கே.எஸ் வெல்டிங் ராஜா டி.மோசஸ் S.உமாசங்கர் E.அஸ்வின் மு.பாலகுரு எஸ்.கே.நசீர் சாதேவராசு C.சங்கர் எம் ராமச்சந்திரன் எம்.சேகர் பிரஸ். கோவிந்த் எம் குப்பம்மாள் காலனி பி வேலு தேவராஜ் ரஜினி சுந்தர் எஸ்.விஜயன் எட்வின் டி.ராஜசேகர் ஆனந்த்ராஜ் மங்கள்ராஜ் சாந்தி பிரேமா மாரியம்மா சசி வசந்த் கலையரசன் பிரசாந்த் உதயநிதி விக்னேஷ் தங்கராஜ் பா சங்கர் விவேக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்

நன்றியுரை பூ மாலை சத்யா எம்.ஏ.

### தியாகராயர் நகர் மேற்கு பகுதி

# 132 ‘அ’ வட்டகழக BLA2, BDA - BLC ஆலோசனை கூட்டம்!

### வட்டக் கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை!

சென்னை, பிப். 27-

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 ‘அ’ வட்ட கழக BLA2 BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் 12/29. சக்கரபாணிதெரு விரிவு மேற்கு மாம்பலம் சென்னை 33ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக அருகில் இன்று (27/02/2026 -வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் அவைத்தலைவர்.சுப. எம்.முருகன் தலைமையில் தென்மேற்கு மாவட்டகழக செயலாளர் மயிலை.த.வேலு. எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. மேற்கு பகுதிகழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர் நகர் தொகுதி பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., திருமதி. பா.கார்த்தகா பாஸ்கர் எம்.சி., கே.எஸ்.வெல்டிங்ராஜா ஆகியோர் முன்னிலையில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது மற்றும் கழக ஆக்கப் பணிகள், தொடர்பாக BLA2, BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

ஆகவே ஆலோசனை கூட்டத்திற்கு வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி சுற்றுச்சூழல் அணி, மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை ராணி, பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்களின் அணி, தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

### நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை, எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சைதை சாதிக் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தி.மு.க. வட்டக் கழக செயலாளர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, பிப். 27-

ஆயிரம் விளக்கு கிழக்குப்பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி திமுக வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று 27-02-2026 வெள்ளிக்கிழமை காலை: 10:30 மணிக்கு தேனாம்பேட்டை இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவை தலைவர் எம்.ஆர்.ஜம்புலிங்கம் தலைமையில் தொகுதி பார்வையாளர் சைதை சாதிக் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் அவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள் இக்கூட்டத்திற்கு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது மார்ச் -1 கழக தலைவர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


